**ORIGINAL ARTICLE**

# இஸ்லாத்தின் பார்வையில் பெருந்தொற்றுக்கள்: கோவிட் 19 ஐ அடிப்படையாகக் கொண்ட ஆய்வு
# [ISLĀTTIN̲ PĀRVAIYIL PERUNTOR̲R̲UKKAḶ: KŌVIṬ 19 AI AṬIPPAṬAIYĀKAK KOṆṬA ĀYVU]

# PANDEMICS WITH ISLAMIC PERSPECTIVE: A STUDY BASED ON COVID - 19

**நபீல் ஸவாஹிர் / Nafeel Zawahir[1*]**
**அக்ரம் அப்துல் ஸமத் / Akram Abdus Samad [2]**
**பஸ்னா ஹஸன் / Fasna Hasan [3]**
**இர்பான் ஹனீபா / Irfan Haifa [4]**

[1] Senior Lecturer, University of Perdeniya, Sri Lanka, Email: nafeel.zawahir@arts.pdn.ac.lk
[2] Postgraduate Student, University of Peradeniya, Sri Lanka.
Email: akramsamad1973@gmail.com,
[3] Postgraduate Student, University of Peradeniya, Sri Lanka.
Email: fathifzn93@gmail.com,
[4] Postgraduate Student, University of Peradeniya, Sri Lanka.
Email: irfanjesa@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/135

**Abstract**

Even though COVID-19 has not spared any community in Sri Lanka, Muslim community is highly concerned. As Islam has guidelines to offer in every aspect of life, it is necessary to draw guidelines in terms of COVID-19 as well to deal on individual-level, family-level and social-level. In that respect, Islamic perspectives on contagions, and Islamic health guidelines and religious rulings have been proposed in this article. This was analysed as a quantitative research based on secondary data. Islam teaches that Allah afflicts mankind with sicknesses so as to guide them towards the right path, while it highly demands both spiritual and physical healthcare practices. In fact, it is meritorious to practise them while it is a sin upon violating them. And during COVID-19 period, Islam suggests flexible rulings that are not contradictory to scientific facts which protects people's lives, dignity, and efforts. It is necessary for a Muslim to acknowledge that health guidelines provided by the authorities are not contradictory to the Islamic principles and it is required for them to abide them to lead a better Islamic way of life.

**Keywords:** COVID-19, Islam, Health, Jurisprudential Exegesis

**ஆய்வுச் சாரம்**

உலகப் பேரனர்த்தமான கோவிட் 19 என்னும் பெருந்தொற்று, இலங்கையில் எல்லா சமூகங்களையும் பாதித்திருந்தாலும், முஸ்லிம் சமூகம் மீதான அவதானம் அதிகமாக இருக்கிறது. இஸ்லாம் எல்லாச் சூழலுக்கும் வழிகாட்டுகிறது என்றவகையில், தனிப்பட்ட மற்றும் குடும்ப வாழ்விலும், சமூக உறவுகளிலும், கோவிட் 19 ஐ எதிர்கொள்வதற்குரிய இஸ்லாமிய வழிகாட்டல்கள் பெற்றுக் கொள்ளப்படுவது அவசியமானது. ஆய்வானது பெருந்தொற்றுக்கள் தொடர்பான இஸ்லாத்தின் பார்வையையும், இஸ்லாமிய சுகாதார வழிகாட்டல்களையும், பெருந்தொற்றுக் கால மார்க்க சட்ட விளக்கங்களினையும் ஆராய்வதினை நோக்கமாகக் கொண்டுள்ளது. இரண்டாம் நிலைத் தரவுகளைப் பிரதானமாகக் கொண்டு, பண்பு சார்ந்த ஆய்வாக இருப்பதனால் கருப்பொருள் பகுப்பாய்வு அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டது. இறைவன் மனிதனை சரியான பாதையை நோக்கித் திருப்பி விடும் நோக்கிலேயே நோய்களை வழங்குகிறான் என்ற நம்பிக்கையை இஸ்லாம் தருவதுடன், ஆன்மீக மற்றும் பௌதீக ரீதியான தற்காப்பு சுகாதாரப் பழக்கவழக்கங்களை பெரிதும் வலியுறுத்துகிறது. இவற்றைக் கடைபிடிப்பது நன்மை தரும் செயற்பாடு என்றும் மீறுவது பாவமானது என்றும் குறிப்பிடுகிறது. அத்துடன் கோவிட் 19 கால விஷேட சூழலில், மனித உயிர்களையும் மனித கண்ணியத்தையும் பாதுகாக்கும் நோக்கிலும், மக்களது சிரமத்தைத் தவிர்க்கும் நோக்கிலும், அறிவியல் உண்மைகளுடன் முரண்படாத நெகிழ்வான சட்டங்களை முன்வைக்கிறது. நாடு வழங்கும் சுகாதார வழிகாட்டல்கள் இஸ்லாத்தின் போதனைகளுக்குற்பட்டவை என்பதை உணர்ந்து, அவற்றை முறையாகக் கடைபிடித்து வாழ்வது ஒரு முஸ்லிமைப் பொறுத்தவரையில் சிறந்த இஸ்லாமிய வாழ்வாகும்.

**கருச்சொற்கள்:** கோவிட் 19, இஸ்லாம், சுகாதாரம், சட்டவிளக்கம்.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 15th March 2021, revised 8th April 2021, accepted 30th April 2021

## முன்னுரை

மானிட வரலாற்றின் ஒவ்வொரு கால கட்டத்திலும் வெவ்வேறு தொற்று நோய்கள் தோன்றி, உலகின் பல பகுதிகளிலும் பரவி, கோடிக் கணக்கான மக்களைக் காவு கொண்டுள்ளதுடன், அரசியல், பொருளாதாரம், சமூகவியல் என பலதுறைகளிலும் பாரிய பாதி ப்புக்களையும் மாற்றங்களையும் ஏற்படுத்தி வந்துள்ளன. இன்று உலகின் கவனத்தை ஈர்த்துள்ள பெருந்தொற்றான கோவிட் 19 ஒரு உலகப் பேரழிவாகக் கருதப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டின் உலகப் போர்களை விடவும் இதன் தாக்கம் அதிகமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. 2019 டிசம்பர் மாதத்தில் சீனாவின் வூஹான் நகரில் ஆரம்பித்த கோவிட் 19 பெருந்தொற்றினால் இது வரையில் (28-03-2021- ஞாயிறு-மு.ப.10.30) 221 நாடுகளில் 127,294,181 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 2,789,711 பேர் உயிரிழந்துள்ளனர் (https://www.worldometers.info/coronavirus/)[1]. இலங்கையைப் பொறுத்தவரையில் இதுவரையில் (28-03-2021 ஞாயிறு - மு.ப.10.30) 91,839 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 558 பேர் உயிரிழந்துள்ளனர்https://www.hpb.health.gov.lk/en)[2]. மேற்கூறப்பட்ட தகவல்களை வைத்துப்

பார்க்கின்ற பொழுது, இது ஒரு உலகப் பேரனர்த்தம் என்பது புலனாகின்றது. இது போன்றதொரு அனர்த்த சூழலுக்குரிய இஸ்லாமிய வழிகாட்டல் முன்வைக்கப்படுவது காலத்தின் கட்டாயமாகும்.

இஸ்லாம் என்பது பிரபஞ்சப் படைப்பாளனால் மனித வாழ்வின் சீர்மைக்காக வழங்கப்பட்ட இறைவழிகாட்டலாகும். இறைதூதுவர்களூடாக மேற்கொள்ளப்பட்ட இவ்வழி காட்டல் முழு மனித குலத்தினதும் நலனை நோக்கமாகக் கொண்டது. 'உங்களை நாம் உலகத்தாருக்கு அருளாகவே அனுப்பியுள்ளோம்' (அன்பியா - 107) என்ற அல்குர்ஆன் வசனம் இதற்கு சான்றாக உள்ளது. அந்தவகையில் மனித வாழ்வின் அனைத்துப் பகுதிகளுக்கும் உரிய வழிகாட்டலை இஸ்லாம் வழங்குகிறது. இது இஸ்லாத்தின் மற்றொரு சிறப்பம்சம் என்பதை பின்வரும் அல்குர்ஆன் வசனம் உணர்த்துகிறது. 'அனைத்தையும் தெளிவுபடுத்தக் கூடியதாகவே இந்த வேதத்தை நாம் இறக்கிவைத்தோம்' (நஹ்ல் - 89). எனவே இஸ்லாம் என்பது மனித நல உலகப் பொதுமறை என்றவகையில், கோவிட் 19 போன்றதொரு பேரனர்த்த சூழலுக்குரிய வழிகாட்டலையும் அது சிறப்பாக முன்வைத்திருக்கிறது. அந்தவகையில் இவ்வாய்வு, பெருந்தொற்றுக்கள் பற்றிய இஸ்லாமியப் பார்வையையும் பெருந்தொற்றுக் கால இஸ்லாமிய தற்காப்பு வழிகாட்டல்களையும் பெருந்தொற்றுக் கால மார்க்க சட்ட விளக்கங்களையும் ஆராய்கிறது.

பொதுவாகப் பெருந்தொற்றுக்களின் பரவலுக்கு, சமூகக் கலாச்சார நடத்தைகள் மற்றும் நெருக்கமான மதக் கிரியைகள் போன்றனவும் பெரிதும் காரணமாக இருந்துள்ளன. முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரையில் கால, இட, மொழி பரிமாணங்கள் எவ்வளவு வேறுபட்டாலும் அவர்களது சமூக, மத, கலாச்சாரப் பழக்கவழக்கங்கள் மத்தியில் ஒத்த தன்மையொன்றை அவதானிக்கலாம், குடும்ப ரீதியாகவும் சமூக ரீதியாகவும் அவர்கள் நெருங்கி வாழ்பவர்கள், இதனால் பெருந்தொற்றுக் காலத்தில் முஸ்லிம் சமூகத்தில் நோய்த் தொற்றும் மரண வீதமும் அதிகரித்துக் காணப்படுவதற்கு ஏதுவாகிறது (Shaima M. Hassan,et.al, 2021)[3]. எனவே, காரணங்களில் இருந்தே தீர்வைப் பெற்றுக் கொள்ளும் அணுகுமுறையின் அடிப்படையில் இந்த ஆய்வில், இஸ்லாமிய மத, கலாச்சார விழுமியங்களில் இருந்தே தீர்வு பெற்றுக் கொள்ளப்படுகிறது.

**ஆய்வு முறையியல்:**

இவ்வாய்வானது பெரும் தொற்றுக்கள் தொடர்பான இஸ்லாமிய பார்வையை அறிந்து, பெரும் தொற்றுக் காலத்தில் தனிப்பட்ட, குடும்ப மற்றும் மார்க்க விவகாரங்களிலும் சமூகத் தொடர்புகளிலும் முஸ்லிம் சமூகம் தனது வாழ்வை ஒழுங்குபடுத்துவதற்குரிய இஸ்லாமிய வழிகாட்டல்களைக் கண்டறிதல் என்பதினை ஆய்வின் நோக்கமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டது என்றவகையில் பின்வரும் ஆய்வு முறையியலினைக் கொண்டமைந்துள்ளது. இது ஒரு பண்பு ரீதியான ஆய்வாகும். ஆய்வுக்காக இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டது. பெரும் தொற்றுக்கள் பற்றியும் குறிப்பாக கோவிட் 19 பற்றியும் எழுதப்பட்ட நூல்கள், இரண்டாம் நிலைத்தரவுகளான குர்ஆன், ஹதீஸ், சஞ்சிகைகள், புத்தகங்கள், இணையங்கள், ஆய்வுக்கட்டுரைகள், பத்திரிகைச் செய்திகள், கட்டுரைகள், பத்வாக்கள் போன்றன இதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. பண்பு ரீதியான ஆய்வவாகையினால் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு கருப்பொருள் பகுப்பாய்வு அடிப்படையில் (Thematic Analysis) பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆய்வு முடிவுகள் எட்டப்பட்டது.

குறிப்பாக கோவிட் 19 தொடர்பான இஸ்லாமிய ஆய்வுகள் இலங்கை சூழலை மையப்படுத்தி மேற்கொள்ளப்படவில்லை. அதிகமான ஆய்வுகள் அறபு மற்றும் முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளை மையப்படுத்தியே தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் அறபு நாடுகளில் செய்யப்பட்ட ஆய்வுகளை இலங்கை சூழலமைவுடனும், இலங்கையில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுடனும் ஒப்பு நோக்கி இலங்கைக்குப் பொருத்தமான வழிகாட்டல்கள் பெறப்பட முடியும்.

## கலந்துரையாடல் மற்றும் கண்டறிதல்கள்

பெருந்தொற்றுக்கள் பற்றிய அறிமுகமும், அதன் இஸ்லாமியப் பார்வையும்

21ஆம் நூற்றாண்டிய உலகானது பல்வேறு இயற்கை மற்றும் மானிட சவால்களையும் எதிர்கொண்டு வருகின்றது. அவ்வகையில் கொரோனா வைரஸ் ஓர் உலகப் பெருந்தொற்றாக உருவெடுத்து உலகுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றது. (http://www.tamilmirror.lk/medical/%E0%A4-/142-1566184-ஃ142-156618 15-12-2020)[4]. பொதுவாக, தொற்றுகின்ற நோய்கள், தொற்றுநோய் கிருமிகளின் மூலம், ஒரு மனிதனிலிருந்தோ விலங்குகள், பறவைகளிலிருந்தோ அல்லது தொற்றுகைக்குட்பட்ட பொருட்களிலிருந்தோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொற்றுகையின் ஆளுகைக்குட்படக்கூடிய இன்னுமொரு மனிதனை அடைந்து, அம்மனிதனை நோயாளியாக்குகிறது. என்றவகையில் மனித வரலாற்றின் ஒவ்வொரு நூற்றாண்டிலும் பல தொற்று நோய்கள் தோன்றி பல லட்சக்கணக்கான மனித உயிர்களைக் காவுகொண்டதுடன், உலக செயற்பாடுகளையும் பல திருப்பங்களுக்குட்படுத்தி வந்துள்ளதையும் காணலாம்.

கொள்ளை நோய்களின் வரலாறு மிக நீண்டதாகும். ஏனெனில் சில சமூகங்களின் அழிவுகளுக்குக் காரணம் கொள்ளை நோய்தான் என்பது வரலாற்றின் நிரூபன எடுத்துக்காட்டாகும். உதாரணமாக நபி முஹம்மத் (ஸல்) அவர்களிடம் கொள்ளை நோய் பற்றி வினவப்பட்டபோது 'கொள்ளை நோய்கள் ஒன்றில் தண்டனையாக தோற்றம் பெறலாம். அது முஃமினுக்கு அருளாக இருக்கும். எவராவது ஒரு மனிதன் இருக்கும் இடத்தில் கொள்ளை நோய் ஏற்பட்டால் அல்லாஹ்வின் நாட்டமின்றி எதுவும் நிகழாது என்ற உறுதியான ஈமானுடன் நன்மையை எதிர்பார்த்தவனாக அவன் பொறுமை காப்பான் என்றால் அவனுக்கு ஷஹீதுடைய நன்மைகள் கிடைக்கப்பெறும்' என்று நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள். (Sahih al Bukhari: 5757, p-1457)[5]. எனும் நபிகளாரின் பதிலானது இக்கொள்ளை நோய் கிறிஸ்துவுக்கு முன்னரான காலப்பகுதியிலேயே இருந்துள்ளது என்பதை தெளிவுபடுத்துவதாக அமைகின்றது. அதேபோன்று ஈஸா (அலை) அவர்களும் கூட அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு குஷ்டரோகிகளையும் (தொழுநோயாளர்களையும்), குருடர்களையும், குணப்படுத்தியுள்ளார்கள் என அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது (Al Quran, 3:49)[6]. அதேபோன்று, ஹிஜ்ரி 18 இல் (கி.பி 639) உமர் (ரழி) அவர்களின் ஆட்சிக்காலத்தில் சிரியாவில் 'அமவாஸ்' என்ற கொள்ளை நோயின் பரவலால் சுமார் இருபத்தையாயிரம் மக்கள் இறந்தனர் என வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

மனித வரலாற்றை திரும்பி பார்க்கையில், அண்மைக் காலத்தில் உலகை அச்சுறுத்திய சார்ஸ், எபோலா வைரஸ் மாத்திரமல்லாது, கடந்த நூற்றாண்டின் துவக்கத்தில் உலகை உலுக்கிய ஸ்பானிஷ் காய்ச்சல் (Spanish Influenza) உள்ளிட்ட தொற்று நோய்களையும்

வரலாற்றின் பக்கங்களில் பார்க்க முடிகிறது. தொற்று நோய்கள் உலகமெல்லாம் பரவி பல உயிர்ப் பழிகளை ஏற்படுத்திவரும் ஓர் பெரும் அனர்த்தமாகவும், சர்வதேச சமூகத்தை ஆட்டம் காணச் செய்து வரும் ஓர் அச்சுறுத்தலாகவும் இடம்பெற்று வந்துள்ளதை வரலாற்றில் காணலாம். அவ்வகையில் கொவிட் - 19 என்ற பெருந்தொற்றானது 2019 டிசம்பரில் சீனாவின் ஹுபே மாகாணத்தின் தலைநகரான வூஹானில் முதன்முதலில் கண்டறியப்பட்டது. ஆரம்பத்தில் (அதாவது 2019.டிசம்பர்.30ல்) வூஹானில் இந்நோய்க்குத் தொற்றானவர்கள் நிமோனியா நோயாளிகள் என்றே அடையாளப்படுத்தப்பட்டனர். 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7ஆம் திகதி விஞ்ஞானிகள் இந்த நோய்க்குக் காரணமான நோய்க் காரணியை ஒரு புதிய வகை வைரஸாக தனியாக அடையாளம் கண்டனர்.

2020ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் உலக சுகாதார அமைப்பு (WHO) இந்த நோயை COVID-19 என்றும், அதனுடன் தொடர்புடைய வைரஸ் அதன் மரபணு கட்டமைப்பின் அடிப்படையில் Severe Acute Respiratory Syndrome Coronavirus 2 (SARS-CoV-2) என்றும் பெயரிட்டது (Ahmad, Z., & Ahad, 2020)[7]. 110 இற்கும் மேற்பட்ட நாடுகளில் பரவலடைந்ததைத் தொடர்ந்து 2020-03-11 அன்று கொரோனா தொற்றை ஒரு பெருந்தொற்றாக உலக சுகாதார அமைப்பு அறிவித்தது.

கொரோனா பரவும் முறை, தொற்றிற்கான அறிகுறிகள் அதன் ஆரம்பத்திலே கண்டறியப்பட்டதுடன், அதற்கான தடுப்பூசி இன்று உலகளாவிய ரீதியில் வழங்கப்பட்டு வருகின்றது. இலங்கையில் 2020 ஜனவரி மாதம் 27ஆம் திகதி அடையாளம் காணப்பட்ட முதலாவது கொரோனா வைரஸ் தொற்றினூடான முதலாவது அலை குறுகிய காலத்தில் வெற்றிகொள்ளப்பட்டாலும், ஒக்டோபர் 4ஆம் திகதி மினுவாங்கொடை ஆடை தொழிற்சாலையில் பெண் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து இலங்கையில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை பரவலாக அதிகரிக்கத் தொடங்கியது. இதனை இலங்கையின் இரண்டாவது கொரோனா அலையாக சுகாதார தரப்பினர் அறிவித்தனர். அதனைத் தொடர்ந்து தற்போது வரை தொற்றாளர்களின் எண்ணிக்கை 90 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

உலகெல்லாம் பரவி பல உயிர் அழிவுகளை ஏற்படுத்தி வரும் கொரோனா தொற்று நோயைத் தொடர்ந்து முஸ்லிம் சமூகத்தினுள்ளே நடைபெற்ற கலந்துரையாடல்களுள் தொற்றுநோய் பற்றிய இஸ்லாத்தின் பார்வை பற்றிய கலந்துரையாடல்கள் முக்கியமானவையாகும். குர்ஆன், ஸுன்னாவின் ஆதாரங்களை வெளிப்படையில் நின்று நோக்கும் பொழுது, தொற்று நோய் என்பது இல்லை என்றும் தொற்று நோய் உள்ளது என்றும் நேர் எதிரான இரு கருத்துக்கள் நிலவுவதைக் காணலாம். 'தொற்றுநோய் என்பது கிடையாது. பறவைகளைக்கொண்டு சகுணம் பார்ப்பதும் (இறந்தவரின் எலும்பு ஆந்தையாக மாறிப் பறப்பதாகக் கருதி) ஆந்தையால் சகுணம் பார்ப்பதும் கிடையாது. 'ஸஃபர்' மாதம் பீடை என்பதும் கிடையாது' (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி). (Sahih al Bukhari: p-1457)[8].

ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் உஸாமா இப்னு அபி வக்காஸ் (ரழி) அவர்களிடம் 'கொள்ளை நோய் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கின்றீர்களா?' எனக் கேட்டுவிட்டு 'கொள்ளை நோய் என்பது பனூ இஸ்ரவேலர்களின் ஒரு கூட்டத்தார் மீது அல்லது உங்களுக்கு முன்பிருந்தோர் மீது அனுப்பப்பட்ட ஒரு வேதனையாகும். அது ஒரு பிரதேசத்தில் இருப்பதாக நீங்கள் கேள்விப்பட்டால், அங்கே நீங்கள் செல்லாதீர்கள். நீங்கள் இருக்கும் பிரதேசத்தில் அது பரவிவிட்டால் அங்கிருந்து தப்பியோட எத்தனித்தவர்களாக அங்கிருந்து

வெளியேறாதீர்கள்' எனக் கூறினார்கள் (Sahih al Bukhari :3473, p-861)[9]. இவ்விரு ஹதீஸ்களையும் நோக்கும் போது, ஒன்று தொற்று நோய் உண்டென்பதை விளக்குவதாகவும், மற்றையது தொற்று நோய் கிடையாது எனக் குறிப்பிடுவதாகவும் உள்ளன. 'தொற்று நோய் கிடையாது' என்ற சொற்றொடரின் விளக்கம் 'அல்லாஹ்வின் நாட்டத்திற்கு அப்பால் தொற்று ஏற்படுகின்றது என்ற நம்பிக்கை பிழையானது என்பதைத் தெளிவுபடுத்தவே நபி (ஸல்) அவர்கள் அவ்வாறு கூறியுள்ளார்கள் என்று ஹதீஸ்கலை விரிவுரையாளர்கள் விளங்கப்படுத்துகின்றார்கள்.

மேற்கூறப்பட்ட ஹதீஸில் நோய் பரவுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாகக் கூறி, அதற்கான தற்காப்பு முறையை நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே நோய் என்பது இறைவனின் நாட்டத்துடன் தொடர்பானது. அது அவன் நாடியோருக்கு வரச் செய்கிறான், என்பதாகவே ஒரு முஸ்லிமின் தொற்று நோய் தொடர்பான விசுவாசம் அமையப் பெற வேண்டும். என்பதோடு, தொற்று நோயைத் தடுப்பதற்கான மனித முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்பதையே இவ் ஹதீஸ்கள் சுட்டிக் காட்டுகின்றன.

மேலும், 'மனிதர்கள் தங்கள் கரங்களால் செய்த தீய வினையின் காரணமாக நிலத்திலும் கடலிலும் பெரும் குழப்பங்கள் (பஸாத்) பரவிவிட்டன. (தீமைகளிலிருந்து) அவர்கள் திரும்பிவிடும் பொருட்டு, அவர்கள் செய்தார்களே (தீயவினைகள்) அவற்றில் சிலவற்றை (இவ்வுலகிலும்) அவர்கள் சுவைக்கும்படி அவன் செய்கிறான்' (Al Quran,30:41)[10]. தொற்று நோய்கள் மனிதர்களது செயல்களின் விளைவாக அமைகின்றன. மனிதர்களின் செயற்பாடுகள் எல்லை மீறிச் செல்கின்றபோது, இறைவனின் எதிர்வினை வெவ்வேறு வடிவங்களில் இப்பூமிக்கு வருகின்றது. வரலாற்றில் இவ்வாறான குழப்ப நிலைகள் ஏற்படும் போதும், இறைவன் ஏற்படுத்திய பௌதீக மற்றும் மனித சமநிலைகள் குழம்பும் போதும் அவற்றை மீள ஒழுங்கமைக்கும் நோக்கில் இறைவன் கொள்ளை நோய்களை ஏற்படுத்துகின்றான். இங்கு மனிதனே தேடிக் கொண்டவற்றின் சில பாதகமான விளைவுகளை அவன் அனுபவிக்கவும் நேரிடுகிறது. இப்போது மனித சமூகம் எதிர்கொண்டிருக்கும் இக்கொரோனா வைரஸ் பிரச்சினையையும் இவ்வாறே நோக்க முடியும்.

அவ்வகையில் கொள்ளை நோய் என்பது அது மனிதன் வழிதவறிச் செல்லும் போது, அவனை வழிநடாத்தவும், அவன் வரம்புமீறிச் செல்லும் போது பிரபஞ்ச ஒழுங்கை உணர்த்தவும், இறைவனின்பால் மனிதனை மீளத்திருப்பவும் இறைவனால் இறக்கப்பட்ட ஒன்றாக அடையாளப்படுத்தலாம்.

பெருந்தொற்றுக்களில் இருந்து தற்காத்துக் கொள்வதற்கான இஸ்லாமிய சுகாதார வழிகாட்டல்கள் சுகாதார வழிகாட்டலைக் கடைபிடிப்பதன் அவசியம்

இஸ்லாத்தின் பார்வையில் தொற்று நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குரிய சுகாதார வழிகாட்டலைகளை கடைபிடிப்பது கட்டாயமாகும். 'உங்களது கரங்களை அழிவின் பக்கம் கொண்டு செல்லாதீர்கள்' (Al Quran, 2:195)[11]. 'சிங்கத்திடமிருந்து விரண்டோடுவதைப் போன்று தொழு நோயாளியை விட்டும் விரண்டோடு' (Sahih al Bukhari:5707, p-2343)[12]. போன்ற அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் ஆதாரங்களோடு அல்லாஹ்வின் காரண - காரிய பிரபஞ்ச விதிகள் மற்றும் உமர் (ரழி) அவர்களின் தொற்று நோய்ப் பிரதேசத்தினுள் நுழையாமை போன்றவை இக் கருத்திற்கு வலுவூட்டுகின்றன.

சுகாதார வழிகாட்டல்களை கடைப்பிடிக்காமை தண்டனைக்குரிய குற்றமாகும். குற்றத்தின் தன்மை பாதிப்பின் அளவு, நோக்கம் என்பவற்றின் அடிப்படையில் குற்றவாளிகள் மரணதண்டனை, நஷ்டஈடு மற்றும் குற்றப்பரிகாரம் செலுத்தல், தஃஸீர் தண்டனைகள் போன்ற தண்டனைகள் வழங்கப்படுவர். 'ஒருவர் தனக்கோ பிறருக்கோ தீங்கிழைக்கக் கூடாது' (Sunan Ibnu Maajah: 2341, p-1112)[13] என்ற ஹதீஸ் மற்றும் 'ஒரு விசுவாசியின் மூலம் மற்றொருவர் தவறுதலாகக் கொலை செய்யப்பட முடியும், அவ்வாறு தவறுதலாகக் கொலை செய்தால் அவர் முஃமினான ஒரு அடிமையை விடுதலை செய்ய வேண்டும், அவரது குடும்பத்தினருக்கு நஷ்டயீடு வழங்க வேண்டும்...' (Al Quran,4:92) என்ற அல்குர்ஆன் வசனம் போன்றவற்றின் அடிப்படையில் சர்வதேச இஸ்லாமிய சட்டவியல் அமைப்பு இத்தீர்ப்பை வழங்கியுள்ளது.
இஸ்லாமிய தற்காப்பு சுகாதார வழிகாட்டல்கள்

பெரும் தொற்றுக்களிலிருந்து பாதுகாப்புப் பெறும் வகையில் இஸ்லாம் முன்வைத்துள்ள தற்காப்பு சுகாதார வழிகாட்டல்களை, ஆன்மீகம் மற்றும் நம்பிக்கை, தற்காப்பு மருத்துவம், சமூகப் பழக்கவழக்கங்கள் சார்ந்தவை என அறிஞர்கள் மூன்று வகைப்படுத்தியுள்ளனர்.
ஆன்மீகம், நம்பிக்கை சார் வழிகாட்டல்கள்

நோய்களிலிருந்து சுகம் பெறுவதில் சடரீதியான மருத்துவ முறைகளுடன், உளரீதியான நம்பிக்கை மற்றும் இறை – மனித தொடர்புகள் பெரும்பங்காற்றுகின்றன. விஷேட சந்தர்ப்பங்களில் அல்குர்ஆன் அத்தியாயங்களான நாஸ், பலக், பகரா மற்றும் ஆயத்துல் குர்ஸி போன்றவற்றை ஓதுதல், திக்ர், அவ்ராதுகள், தவ்பா, இஸ்திஃபார், பிரார்த்தனைகள் மேற்கொள்ளுதல் மற்றும் இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், நற்செயல்களைப் புரிதல் போன்ற வழிமுறைகளுடாக சகல நோய்களிலிருந்தும் பாதுகாப்புப் பெற முடியும். 'யா அல்லாஹ் எனது உடலில் ஆரோக்கியமளிப்பாயாக' (Sunan Attirmiti, 3470,p-1724.)[14] என நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் பிரார்த்தித்துள்ளார்கள்.
தற்காப்பு மருத்துவம் சார் வழிகாட்டல்கள்

தற்காப்பு மருத்துவம் என்பது வைரஸ்கள், உடல் மற்றும் சுவாச நோய்கள் போன்றவற்றிலிருந்து தனிநபரையும் சமூகத்தையும் பாதுகாத்தலோடு தொடர்புடையதாகும். இஸ்லாமிய ஷரீஆ தனிமைப்படுத்தல், சமூக இடைவெளி பேணல், தொற்று நோயாளிகளைத் தொடுவதைத் தவிர்த்தல் போன்ற வழிகாட்டல்களை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பரிந்துரை செய்துள்ளது.

1.தனிமைப்படுத்தல்:

பெருந்தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வழிமுறையாக சுய தனிமைப்படுத்தல் மற்றும் பிரதேச ரீதியான தனிமைப்படுத்தலை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. 'நோயுண்டாக்குபவரை சுகதேகியிடம் அழைத்துச் செல்ல வேண்டாம்' (Sahih al Bukhari, 5707, p-2343)[15] 'ஒரு பிரதேசத்தில் கொள்ளை நோய் பரவியிருப்பதாக நீங்கள் கேள்விப்பட்டால் அங்கு நீங்கள் செல்ல வேண்டாம். நீங்கள் இருக்கும் பிரதேசத்தில் கொள்ளை நோய் பரவினால் அதிலிருந்து தப்புவதற்காக வெளியேறாதீர்கள்.' (Sahih al Bukhari, 5771, p-2352)[16] போன்ற ஹதீஸ்களினூடாக சுகதேகிகளுடன் தொற்றாளர்கள் கலந்துறவாடாமல் தனிமைப்படுத்த வழிகாட்டப்பட்டுள்ளது.

சமூக இடைவெளி பேணல் : மனிதர்கள் தம்மிடையே குறைந்தது ஒரு மீற்றர் இடைவெளி பேணுவதோடு ஒன்று கூடுதலைத் தவிர்த்தல் என்ற இவ்வழிகாட்டல் 'உங்களிடையே ஒரு ஈட்டி அல்லது இரு ஈட்டிகளின் பிரமாணம் இருக்கும் விதத்தில் இடைவெளி விட்டு தொழு நோயாளருடன் பேசுங்கள்' (Sahih al Muslim, 2231, p-1012)[17.] என்ற ஹதீஸினூடாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இவ்வழிகாட்டலை உதாசீனம் செய்வதானது நோய்ப் பரவலையும் மரணவிகிதத்தையும் அதிகரிக்கச் செய்யும் என்பது வரலாற்று ரீதியாக நிரூபணமாகியுள்ளது.

தொற்று நோயாளர்களைத் தொடுவதைத் தவிர்த்தல் : தொற்றுநோய்ப் பரவல் வழிமுறைகளாக தொற்றுக்குள்ளானவரை முத்தமிடல், அவருடன் கைலாகு கொடுத்தல் போன்ற நேரடித் தொடுகைகள் காணப்படுகின்றன. நபி(ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் இஸ்லாமிய ஆட்சியாளர்களும் இவற்றை விட்டும் முன்னெச்சரிக்கையோடு நடந்துள்ளார்கள். ஸகீப் கோத்திர தொழு நோயாளர் ஒருவர் இஸ்லாத்தை தழுவ வருகைத் தந்தபோது அவரது கைகளைத் தொடாமல் 'உமது பைஅத்தை ஏற்றுக் கொண்டோம். எனவே நீர் திரும்பிச் செல்வீராக' (Sahih al Muslim, 2231, p-1012)[18.] எனக் கூறியமை மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சமூக பழக்கவழக்கங்கள் சார் வழிகாட்டல்கள்

இஸ்லாம் சுகாதார நலன்களை வணக்க வழிபாடுகளுடன் இணைத்துள்ளதோடு பின்வரும் சமூகப் பழக்கவழக்கங்கள் சார் வழிகாட்டல்களையும் வழங்கியுள்ளமை சிறப்பம்சமாகும்.

தனியாள் சுத்தம் பேணல் : தொழுகை அங்கீகரிக்கப்படுவதற்கான நிபந்தனையாக உடல், உடை, இட சுத்தம் மற்றும் வுழுவை ஆக்கியுள்ளதன் மூலம் தனிமனித சுய சுத்தத்திற்கு இஸ்லாம் வழிகாட்டியுளள்ளது. 'உமது ஆடையை தூய்மையாக்குவீராக' (Al Quran,74: 4)[19.] என அல்குர்ஆன் வலியுறுத்துகின்றது.

கைகளைச் சுத்தம் செய்தல் : இஸ்லாம் தூக்கத்திலிருந்து விழித்தெழுதல், உண்ணல், பருகல், மலசலம் கழித்த பின்னர் சுத்தம் செய்தல் போன்ற சந்தர்ப்பங்களில் கைகளின் சுத்தத்தை வலியுறுத்துகின்றது. 'உங்களில் ஒருவர் தூக்கத்திலிருந்து எழுந்தால் மூன்று முறை கைகளைக் கழுவாமல் பாத்திரத்தினுள் கைநுழைக்க வேண்டாம்' (Sahih al Bukhari ,74, p-153)[20]. தும்மல் மற்றும் இருமலின் போது மூக்கை மறைத்தல் : தொற்று நோய் கிருமிகள் வாய், மூக்கு போன்ற சுவாசப் புலன்களினூடாகவே உடலினுள் நுழைகின்றன. 'நபி (ஸல்) அவர்கள் தும்மினால் தனது முகத்தை கரத்தினால் அல்லது ஆடையினால் மறைத்துக் கொள்வார்கள்' (Sunan Attirmit,2745, p-1224)[21.] இதன் மூலம் சுகாதார வாழ்வுக்கு வழிகாட்டியுள்ளார்கள்.

உணவுப் பழக்கவழக்கங்களில் தூய்மைப் பேணல் : தவறான உணவுப் பழக்கவழக்கங்கள் பெருந்தொற்றுக்களுக்கு காரணமாக அமைகின்றது. இதனால் உணவு, குடிபானப் பாத்திரங்களில் ஊதுதல் மற்றும் மூச்சு விடுதல் போன்ற செயல்களை இஸ்லாம் தடுத்துள்ளது. நபி (ஸல்) அவர்கள் பாத்திரத்தினுள் ஊதப்படுவதையோ, மூச்சு விடப்படுவதையோ தடுத்தார்கள். (Sunan Abu Dawud , 3874, p-531.)[22]. பௌதீகச் சூழல் சுத்தம் பேணல் : பௌதீகச் சூழல் மாசடைகின்றமையால் தொற்று நோய்கள் பரவுகின்றன. பொது மக்கள் பயன்படுத்தும் நீர் நிலைகள், பொதுவிடங்கள் போன்றவற்றை அசுத்தப்படுத்துவதை இஸ்லாம் கண்டித்துள்ளது.

சாபத்தை ஈட்டித்தரும் மூன்று இடங்களை பயந்துகொள்ளுங்கள், அவை நீரிலும், நிலத்திலும், பொதுமக்களின் பாதையிலும் மலசலம் கழித்தலாகும் (Sahih al Bukhari, 153, p-76.)[23] என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மருத்துவ சிகிச்சை தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாடு மனிதன் நோய்வாய்ப்படுகின்ற போது அல்லாஹ்வின் மீது தவக்குல் வைத்து நல்லெண்ணம் கொள்வதுடன் மருத்துவ சிகிச்சை வழிமுறைகளைக் கடைப்பிடிப்பது இறைக்கட்டளையாகவும், இறைத்தூதர்களின் வழிகாட்டலாகவும் அமைந்துள்ளது. 'அல்லாஹ் நோயுடன் மருந்தையும் இறக்கியுள்ளான். ஒவ்வொரு நோய்க்கும் மருந்தை வைத்துள்ளான். எனவே மருத்துவம் செய்யுங்கள்' என நபி(ஸல்) கூறியுள்ளார்கள் (Sunan Abu Dawud, 543, p-221)[24]. அல்குர்ஆன், ஹதீஸ், இஜ்மா, மகாஸிதுஸ் ஷரீஆ போன்ற ஆதாரங்களினூடாக மருத்துவ சிகிச்சை ஷரீஅத் ஆக்கப்பட்டுள்ளது. எனினும் மனிதர்களது சூழ்நிலைகள் மற்றும் நிலைமைகளுக்கேற்ப வாஜிப், முஸ்தஹப், முபாஹ் எனும் நிலைப்பாடுகளை அறிஞர்கள் முன்வைத்துள்ளனர்.

பெருந்தொற்றுக்கள் என்னும் அசாதாரண சூழலுக்கான மார்க்க சட்டவிளக்கங்கள்

பெருந்தொற்றுச் சூழலுக்கான மார்க்க சட்டவிளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கு மூன்று அறிவியற் படிமுறைகளைக் கடந்து செல்ல வேண்டும் என்பது இஸ்லாமிய சட்ட மரபாகும், அவற்றைப் பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.

1. பெருந்தொற்றுச் சூழலை அடையாளம் காணல்.
2. பெருந்தொற்றுச் சூழலின் சட்டப் பெறுகைக்கான அடிப்படைகளை இனம்காணல்.
3. பெருந்தொற்றுச் சூழலுக்குரிய மார்க்க சட்டவிளக்கங்களைப் பெற்றுக் கொள்ளல்.

ஏனெனில் எந்தவொரு சட்ட விவகாரமும் அணுகப்படும் பொழுது, முதலில் அந்தப் பிரச்சினையை விளங்கிக் கொள்வது அவசியமானது, அடுத்து, அந்தப் பிரச்சினை மீது பிரயோகிக்க முடியுமான சட்ட அடிப்படைகளை அடையாளம் காண வேண்டும். அடுத்து குறித்த பிரச்சினை மீது அந்த சட்ட அடிப்படைகளைப் பிரயோகிப்பதன் மூலம் பிரச்சினைக்குரிய சட்டத் தீர்வு என்ன என்பது பெற்றுக் கொள்ளப்படும். சட்டப்பெறுகைக்கான இந்த மரபைத்தான் இமாம் இப்னுல் கையிம் அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள் 'ஒரு முப்தியைப் பொறுத்தவரை இரண்டு வகையான தெளிவுகள் இருக்கின்ற பொழுதுதான் மிகச் சரியான பத்வா வழங்குவது சாத்தியப்படுகிறது, முதலாவது பஹ்முல் வாகிஃ என்னும் பிரச்சினை நிகழ்ந்த சூழலை மிகச்சரியாக விளங்கிக் கொள்ளுதல், நடந்தது என்ன என்பதை அதன் பின்னணி, காரணங்கள், அடையாளங்கள் மூலம் அறிந்து கொள்ளுதல், இரண்டாவது, பஹ்முல் வாஜிப் என்னும் அந்தப் பிரச்சினைக்குரிய அல்லாஹ்வின் சட்டத்தை அறிந்து கொள்ளுதல், இது அல்குர்ஆனிலிருந்து அல்லது அவனது தூதரின் வார்த்தையிலிருந்து அறிந்து கொள்ளப்படும், பின்னர் ஒன்றை மற்றையதில் பிரயோகிக்க வேண்டும்' என்றார் (Ibn Qayyim al -jawziyya,2001)[25].

பெருந்தொற்றுச் சூழலை அடையாளம் காணல்

பெருந்தொற்றுச் சூழலை அடையாளம் காணல் என்பதை இரண்டு வகையில் நாம் நோக்க முடியும். முதலாவது, கோவிட் 19 என்னும் பெருந்தொற்றின் தன்மை, தாக்கம் போன்றவற்றை அறிந்து கொள்ளுதல், இதனைப் பற்றிய விஞ்ஞானபூர்வமான நம்பகமான தகவல்களைப் வழங்குவதில் அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக உலக சுகாதார இஸ்தாபனம் காணப்படுகிறது. அதன் தகவல்களை மையப்படுத்தி நோக்குகின்ற பொழுது, கோவிட் 19 என்னும் பெருந்தொற்றின் தன்மை மற்றும் தாக்கம் குறித்து பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

கோவிட் 19 என்பது கொரோனா வைரஸ் குடும்பத்தில் இறுதியாகக் கண்டுபிடிக்கப்பட்ட வைரஸினால் பரவக் கூடிய ஒரு தொற்று நோயாகும், இருமல், தும்மல், பேச்சு போன்றவற்றினால் வெளிப்படும் நீர்த்துகள்கள் மூலம் பரவக் கூடியது, காய்ச்சல், சோர்வு, வரண்ட இருமல் போன்ற பிரதான நோய் அறிகுறிகளை இது கொண்டிருந்தாலும் சில சமயம் எந்த அறிகுறியும் வெளிப்படாமல் இருக்கவும் வாய்ப்பிருக்கிறது, இது கேவமாகப் பரவக் கூடிய இயல்பு கொண்டது என்பதுடன் இந்த வைரஸ் நீரிலோ அல்லது கழிவு நீர்களிலோ உயிர்வாழும் சக்தி கொண்டது என்பதற்கான எந்த ஆதாரமும் இதுவரையில் கிடையாது, இதற்கு இதுவரை மருந்து கண்டு பிடிக்கப்படவில்லை என்பதுடன், இதனால் கடுமையாகப் பாதிக்கப்படும் ஒருவர் அதிதீவிர சிகிச்சை ஊடாகவே பராமரிக்கப்படல் வேண்டும், எனவே நெருங்கியிருத்தல் மற்றும் ஒன்று கூடல்கள் தவிர்க்கப்படல் வேண்டும் (*https://www.who.int/ar/emergencies/diseases/novel-coronavirus-2019/question-and-answers-hub/q-a-detail/coronavirus-disease-covid-19 15-12-2020* 15-12-2020) [26]. இது கோவிட் 19 ஒரு அசாதாரண சூழல் என்பதை உணர்த்துகிறது.

இரண்டாவது, கோவிட் 19 ஐ இஸ்லாமியச் சட்டக் கண்ணோட்டத்தில் வரையறை செய்தல். மேலே குறிக்கப்பட்டது போல் கோவிட் 19 என்னும் பெருந்தொற்று ஒரு அசாதாரண சூழல் என்றவகையில், இஸ்லாமிய சட்டப் பார்வையில் இரண்டு வடிவங்களில் அதனை வரையறை செய்ய முடியும்.

அல்உத்ர் (العذر) என்னும் சட்ட நியாயம்: இஸ்லாம் மனிதனுக்கு அவனது சக்தியை மீறிய சட்டங்களைத் தருவதில்லை, சட்டம் என்பது அருளாகவும் இலகுவாகவுமே அமைய வேண்டும் என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும். இந்தப் பின்புலத்தில் இருந்தே அல்உத்ர் என்னும் சிந்தனை எழுகின்றது. அதாவது சட்ட அமுலாக்கத்தின் பொழுது, மனிதன் அவனது சக்தியை மீறியதொரு சிரமமான சூழ்நிலையை எதிர்கொள்கின்றான் எனின், அந்த சட்டம் இலகுபடுத்தப்பட அல்லது இல்லாமல் செய்யப்பட அல்லது மாற்றப்படுவதற்கான நியாயமாக அது காணப்படும், இந்த சட்ட மாற்றங்கள் குற்றமாக கருதப்பட மாட்டாது, இதுவே இஸ்லாமிய சட்ட மரபில் அல்உத்ர் எனப்படுகிறது. (Akra Ali,M :2015)[27]. கோவிட் 19 என்னும் பெருந்தொற்றைப் பொறுத்தவரையிலும் அதனை உத்ர் என்னும் சட்ட நியாயம் ஒன்றாகக் கருத முடியும். காரணம் இதன் வேகமான பரவல் இயல்பின் காரணமாக மக்களது இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், உயிர் பற்றிய அச்சமும் பெரியளவில் காணப்படுகின்றது. இந்த சூழ்நிலையில் சாதாரண ஒழுங்கில் சட்டங்களை அமுல்படுத்துவது சிரமமான ஒன்றாக மாறியுள்ளது. எனவே இங்கு சட்டங்கள் இலகுபடுத்தப்பட அல்லது மாற்றப்பட்ட அல்லது இல்லாமல் செய்யப்பட முடியும்.

நாஸிலா (النازلة) என்னும் புதிய பிரச்சினை: கோவிட் 19 என்பதை சட்டங்களில் இருந்து சலுகைகள் பெறுவதற்கான ஒரு சூழ்நிலையாக மாத்திரமன்றி புதிய சட்டத்தீர்வுகள் அவசியப்படக் கூடிய புதியதொரு பிரச்சினையாகவும் அடையாளப்படுத்த முடியும். இதனை இஸ்லாமிய சட்டமரபில் நாஸிலா என்று அழைப்பர். முதல் தடவையாக நிகழுகின்ற பிரச்சினைகளை இது குறிக்கின்றது, ஏலவே நிகழ்ந்திருந்தாலும் அதன் காரணங்கள் அல்லது வடிவங்கள் என்பன வேறுபட்டிருக்கும், இவை குறித்த நேரடியான சட்டவசனங்களைக் காண முடியாதிருப்பதுடன் இவை பற்றிய முன்னைய இமாம்களின் ஆய்வுகளையும் காண முடியாதிருக்கும், இந்நிலையில் புதிய இஜ்திஹாத் ஒன்று அவசியப்படும். இது பழைய தீர்வுகளைப் பிரதி பண்ணாமல் புதிய தீர்வொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான ஆய்வாகவே அமைய வேண்டும் (Mohammed Usri,I : 2011)[28].

பெருந்தொற்றுச் சூழலின் சட்டப் பெறுகைக்கான அடிப்படைகளை இனம்காணல்

இமாம் ஷாதிபி அவர்கள் குறிப்பிடுகின்றார்கள், 'ஷரீஅத் ஒவ்வொரு கிளை விவகாரத்திற்கும் தனித்தனியாக தீர்வு சொல்வது கிடையாது, மாற்றமாக மொத்தமான விதிகளையும் பொதுவான பிரயோகங்களையுமே அது கொண்டு வருகிறது, அவை எண்ணிலடங்காத கிளை விவகாரங்களை உள்ளடக்கியிருக்கும்...' என்றார்கள் (Ishaq Ash Shaathibi,I:2017)[29]. இமாம் ஷாதிபியுடைய இந்த வார்த்தைகள் இஸ்லாமிய சட்டமரபில் சட்டப் பெறுகைக்கான பிரதான பொறிமுறையை விளங்கப்படுத்துகிறது, அதாவது அல்குர்ஆன் மற்றும் சுன்னா என்பன இஸ்லாத்தில் சட்ட மூலங்கள், ஆனால் அவை ஒவ்வொரு கிளை விவகாரத்திற்குமான நேரடியான சட்டத்தீர்வை மிகவும் குறைவாகவே முன்வைக்கின்றன, சட்டத்திற்கான பொது விதிகளையும் கோட்பாடுகளையுமே அதிகமாக முன்வைத்திருக்கின்றன, இவற்றை அடிப்படையாகக் கொண்டு எல்லாக் காலத்திற்கும் சூழலுக்குமான சட்ட முடிவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்தப் பொறிமுறையின் அடிப்படையில் அசாதாரண சூழல் ஒன்றைக் கையாள்வதற்குரிய விதிகளும் கோட்பாடுகளும் எவை என்பதைப் பற்றியே இந்தப் பத்தியில் கலந்துரையாடப்படுகின்றது.

கோவிட் 19 என்னும் பெருந்தொற்றுச் சூழலை எதிர்கொள்வதற்குரிய சட்டவாக்க விதிகளை நாம் இரண்டு வகையாக நோக்கலாம். ஒன்று பொது விதிகள் மற்றையது பிரயோக விதிகள்.

கோவிட் 19 சூழலின் சட்டவாக்கத்திற்கான பொது விதிகள்

இங்கு பொது விதிகள் என்பது அசாதாரண ஒரு சூழலில் மாத்திரமன்றி சட்டவாக்கத்தின் போது பொதுவாகக் கடைபிடிக்கப்பட வேண்டிய பிரதான விதிகளைக் குறிக்கின்றன. இவை கோவிட் 19 சூழலின் சட்டவாக்கத்துடன் நெருக்கமாக சம்பந்தப்படுவதனால் குறிப்பாக இங்கு இவை குறிப்பிடப்பட்டுள்ளன. மகாஸிதுஷ் ஷரீஆவைக் கருத்தில் கொள்ளுதல் : மகாஸிதுஷ் ஷரீஆ என்பது ஷரீஆவின் நோக்கங்களைக் குறிக்கின்றது, மார்க்கம், உயிர், அறிவு, வம்சம், செல்வம் ஆகியவற்றை வளர்த்தல் மற்றும் பாதுகாத்தல் என்பன இஸ்லாத்தின் மிகப் பிரதானமான நோக்கங்களாகக் கணிக்கப்படுகின்றன(Juhaim,N: 2009, P-146)[30]. சட்டவாக்கத்தில் இந்த நோக்கங்கள் கவனத்தில் எடுக்கப்படும் பொழுதுதான் அங்கு மனித நலன் நிலைநாட்டப்படுகிறது, இந்தப் பின்புலத்திலேயே இமாம் ஷாதிபி அவர்கள் இஜ்திஹாதுக்கான நிபந்தனைகளைக் குறிப்பிடும் பொழுது, மகாஸிதை அறிந்து கொள்வதை மிகவும் பிரதானமாகக் குறிப்பிட்டுள்ளார்கள் 'இரண்டு பண்புகளைப் பெற்றிருக்கின்ற ஒருவர்தான் இஜ்திஹாதினுடைய தரத்தை அடைந்து கொள்வார், ஒன்று, மகாஸிதுஷ் ஷரீஆவை அதன் முழுமையான வடிவில் விளங்கிக் கொள்ளுதல், இரண்டு, மகாஸிதை விளங்கிக் கொண்டதன் அடிப்படையில் சட்டப் பெறுகையை மேற்கொள்ளும் ஆற்றல் பெற்றிருத்தல்' என்றார்கள் (Juhaim,N:2009, P-610)[31]. இவை சட்டவாக்கச் செயற்பாட்டில் மகாஸிதின் வகிபாகத்தைத் தெளிவாக உணர்த்தும் வாசகங்கள். பெருந்தொற்றுக்கள் போன்ற அசாதாரண சூழல் ஒன்றின் சட்டவாக்கத்தில் மனித நலன் சார்ந்து தீர்மானம் பெறுவதற்கு ஷரீஆவின் மகாஸிதுகளைக் கருத்தில் கொள்வது இன்றியமையாததாகும்.

2. நலன்கள் மற்றும் தீமைகளை நிறுத்துப் பார்த்தல்:

நன்மை தீமைகளை நிறுத்துப் பார்த்தல் என்பது அவற்றின் பருமன், ஆழம், தாக்கம், ஆயுள் போன்ற பல விடயங்கள் சட்டச் செயற்பாட்டில் கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும் என்பதாகும். கோவிட் 19 பெரும் தொற்றுச் சூழலுக்கான சட்டத் தேடலில் இந்த அணுகுமுறை மிகவும் இன்றியமையாதது, ஏனெனில் நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான முரண்பாடு இங்கு மிக முக்கிய காரணியாக இருக்கின்றது, இவற்றை அளந்து பார்த்து தீர்ப்புக்கள் பெறப்படல் வேண்டும் என்பது இஸ்லாத்தின் மிக முக்கிய சட்டமரபு. இதனை இமாம் இப்னு தைமியா அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள், 'நலன்களை அடைந்து கொள்ளவும் அவற்றை சம்பூரணப்படுத்தவும் அதுபோல் தீமையை இல்லாமல் செய்யவும் அதனைக் குறைக்கவும் ஷரீஅத் வந்திருக்கிறது, ஷரீஅத் இரண்டு நன்மைகளில் மிகச் சிறந்ததை முற்படுத்துகிறது, அதுபோல் இரண்டு தீமைகளில் மிகவும் மோசமானதை முற்படுத்துகிறது, இரண்டு நலன்களில் தாழ்ந்ததை கைவிடுவதன் மூலம் உயர்ந்ததை அடைந்து கொள்கிறது, இரண்டு தீமைகளில் தாழ்ந்ததை சகித்துக் கொள்வதன் மூலம் உயர்ந்ததைத் தடுக்கிறது' என்றார்கள் (Ibn Taymiyyah,2004,P-48)[32]. மற்றொரு சமயம் கூறுகிறார் 'நன்மையையும் தீமையையும் வேறுபடுத்தி அறிபவன் அறிவாளியல்ல, மாற்றமாக நன்மைகளில் மிகச் சிறந்ததையும் தீமைகளில் மிக மோசமானதையும் வேறுபடுத்தி அறிபவனே அறிவாளி' என்றார்கள் (Ibn Taymiyyah,2004,P-54)[33].

3. பிக்ஹுத் தவக்குஃ (فقه التوقع) என்னும் விளைவுகளைக் கருத்தில் கொள்ளுதல்:

பிக்ஹுத் தவக்குஃ என்பது எதிர்காலத்தில் நிகழலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற ஒரு விளைவைக் கருத்தில் கொண்டு நிகழ்காலத்தில் செயலாற்றுவதைக் குறிக்கிறது, எதிர்பார்க்கப்படும் விளைவை அடிப்படையாகக் கொண்டு ஒரு செயல் அனுமதிக்கப்படவோ அல்லது தடுக்கப்படவோ முடியும், பெருந்தொற்றுச் சூழலில் விளைவைக் கணித்துச் செயற்படுவதற்கான தேவை பெரிதும் காணப்படுகின்றது. சட்டவாக்கத்தின் பொழுது, இஸ்லாமிய சட்ட மரபில் கைக் கொள்ளப்படும் மிக முக்கிய பொறிமுறைகளில் இதுவும் ஒன்று. ஆரம்ப கால இமாம்கள் இப்பொறிமுறையை இரண்டு கலைச் சொற்கள் மூலம் விளங்கப்படுத்தியுள்ளனர். ஒன்று ஸத்துத் தராஇஃ (سد الذرائع) என்னும் தீமைக்கு இட்டுச் செல்லும் காரணியைத் தடை செய்தல், இரண்டு, இஃதிபாருல் மஆலாத் (إعتبار المآلات) என்னும் எதிர்கால விளைவைக் கருத்தில் கொண்டு தீர்மானம் மேற்கொள்ளுதல் என்பனவாகும். இவை பற்றி கலாநிதி அஹ்மத் அர்ரைஸூனி அவர்கள் குறிப்பிடும் பொழுது, 'தராஇஃ மற்றும் மஆல் ஆகிய இரண்டும் விளைவைக் கருத்தில் கொள்கின்றன என்ற வகையில் இரண்டும் ஒற்றுமைப்படுகின்றன. ஆனால் தரீஆ என்பது வழிமுறையைக் குறிக்கும் மஆல் என்பது விளைவைக் குறிக்கும். தரீஆ என்பது மிகப் பெரும்பாலும் ஒரு செயலைச் செய்பவரின் நோக்கத்துடன் சம்பந்தப்பட்டது, அதாவது செயலைச் செய்பவர், தான் விரும்பி ஒரு நோக்கத்தை அடைந்து கொள்ள முற்படுகிறார். ஆனால் மஆல் என்பதில் ஒருவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் குறித்த ஒரு விளைவு எட்டப்படும். எனவே செயலை செய்பவரின் விரும்பத்துடன் ஒரு விளைவு அடையப் பெறுவதாக இருப்பினும் செயலைச் செய்பவர் விரும்பாமல் ஒரு விளைவு நடைபெறுவதாக இருப்பினும் விளைவின் தன்மையைப் பொருத்தே அந்த செயல் அனுமதிக்கப்படுவதா? அல்லது தடைசெய்யப்படுவதா? என்பது தீர்மானிக்கப்படுகிறது' என்கின்றார்கள்(Arraisooni,A :2013)[34].

4. ழன் (الظن) என்னும் பெரும்பாலும் உறுதியான விடயத்தை ஏற்றல்:

இஸ்லாமிய சட்ட மரபில் ழன் என்பது, இடம்பாட்டுக்குரிய இரண்டு விவகாரங்கள் மத்தியில் ஒன்றை ஏற்புடையதாகக் கருதுவதாகும். ஆனால் அது மிகவும் திட்டவட்டமானதாக இருக்க மாட்டாது. இரண்டு இடம்பாடுகளும் சமதரத்தில் காணப்படுகின்ற பொழுது, அதனை ஷக் (الشك) என்னும் சந்தேகமானது என்போம், இரண்டு இடம்பாடுகளில் ஏதேனும் ஒன்று மற்றையதை விடவும் பலமானதாக இருந்தால் அதனை ழன் என்போம், பலம் குறைந்ததை வஹ்ம் (الوهم) என்னும் மாயை என்போம். இங்கு சந்தேகமானதும் மாயையும் சட்டத்தில் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது. ஆனால் ழன் என்னும் பெரும்பாலும் உறுதியான விடயம் கருத்தில் கொள்ளப்படும். ஒரு சட்ட ஆய்வின் பொழுது, குறித்த பிரச்சினையின் வடிவம், அதற்கான காரணம் மற்றும் ஆதாரம் போன்ற அனைத்து விடயங்களிலும் இந்த விடயம் பிரயோகிக்கப்படும். இதனை இமாம்கள் ஒரு சட்ட விதியாகவே முன்வைத்துள்ளனர். 'ஷரீஅத் சட்டங்களில் பெரும்பாலும் உறுதியான ஒன்றை கருத்தில் கொள்வது அனுமதிக்கப்பட்டுள்ளது' என்பர் (Alharbi,M.M: 2020)[35].

5. தீமை அகற்றப்படல் வேண்டும் என்ற விதி:

தீமை அகற்றப்படல் வேண்டும் என்பது இஸ்லாமிய சட்டமரபில் அடிப்படை விதிகளில் ஒன்றாகும். பெருந்தொற்றுக்கள் என்பதே பெரும் தீமை என்றவகையில் அவற்றை அகற்றும் சட்டவாக்கத்தில் இந்த விதி மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. இங்கு தீமை என்பது பயன் என்ற கருத்துக்கு எதிர் கருத்தைத் தருகிறது, பிறர் மீது பிரயோகிக்கப்படும் அனைத்து வகை தீமைகளையும் இது குறிக்கும். எந்த ஒரு இடத்தில் தீமை நடைபெற்றாலும் அது இல்லாமல் செய்யப்படுவது மாத்திரமன்றி தீமை நடைபெறாமல் பாதுகாப்பதையும் இந்த விதி வலியுறுத்துகிறது. கலாநிதி முகம்மத் ஸுஹைலி அவர்கள் இது பற்றிக் கூறும் பொழுது, தீமையைத் தடுத்தல் என்பதினுள் அது நிகழ்வதற்கு முன்னர் சாத்தியமான வழிமுறைகளைப் பயன்படுத்தி தற்காப்பதையும் நிகழ்ந்ததற்குப் பின்னர் முடியுமான வழிமுறைகளைப் பயன்படுத்தி அதனை நீக்குவதும் மீண்டும் நிகழாமல் பார்த்துக் கொள்வதும் அடங்கும் என்றார்கள் (Abu Dhabi,2013)[36].

கோவிட் 19 சூழலின் சட்டவாக்கத்திற்கான பிரயோக விதிகள்

இங்கு பிரயோக விதிகள் என்பதன் மூலம், நேரடியாக சட்டவாக்கத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றவற்றைக் குறிக்கின்றன. இவை பொதுவாக ஷரீஆவில் விதிவிலக்கான சூழல்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பதற்காக அதிகம் பயன்படுத்தப்படுபவை எனலாம். அந்தவகையில் கோவிட் 19 போன்ற ஒரு அசாதாரண சூழலுக்கான சட்டவாக்கத்திற்கு இவை மிகவும் பொறுந்தி வரக் கூடியவையாகும்.

1. கஷ்டம் இலகு தன்மையைக் கொண்டு வரும். (المشقة تجلب التيسير):
கஷ்டம் என்பதன் பொருள் வழமையில் சகித்துக் கொள்ள முடியாத ஒரு இடர் நிலையைக் குறிக்கும். இலகு தன்மை என்பது, செயற்படுத்துவதற்கு இயலுமான எல்லையைக் குறிக்கிறது. ஒருவர் தனக்குரிய ஒரு கடமையை நிறைவேற்றும் பொழுது, வழமைக்கு மாற்றமான ஒரு சிரமத்தை எதிர்கொள்கிறார் எனின், அவர் சிரமத்தை எதிர்கொள்ளாத வகையில் தனது கடமையை நிறைவேற்றும் வகையில் சட்டம் இலகுபடுத்திக் கொடுக்கப்படுவதையே இந்த விதி குறிக்கின்றது (Alharbi,M.M: 2020)[37].

2. நிர்ப்பந்த நிலைகள் தடுக்கப்பட்டவற்றையும் ஆகுமாக்கும். (الضرورات تبيح المحظورات):
ழரூரா என்பது கடுமையான தீங்குக்கு உற்படுகின்ற ஒரு நிலையைக் குறிக்கும், இந்நிலையில் ஒரு மனிதனால் சுய தெரிவுடன் செயற்பட முடியாது, அவன் அந்த தீங்கிலிருந்து எவ்வாறேனும் வெளி வருவதற்கான ஒரு வழியைப் பற்றி சிந்திக்கும் நிலையிலேயே ஏதேனும் ஒரு செயலைச் செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறான், இத்தகைய நிர்ப்பந்த நிலைக்கு உற்படும் ஒருவருக்கு ஷரீஅத்தில் தடை செய்யப்பட்ட ஒரு விடயமும் அனுமதிக்கப்படுகிறது என்பதுவே இந்த விதி சொல்லும் கருத்தாகும் (Arraisooni,A :2013) [38].

3. கஷ்டமானதன் காரணமாக இலகுவானது இல்லாமல் போய்விட மாட்டாது. ( الميسور لا يسقط بالمعسور):
ஒரு சட்டத்தை அதன் முழுமையான வடிவில் நிறைவேற்ற முடியாதிருந்தாலும் அதன் சில பகுதிகளை மாத்திரமேனும் அமுல் செய்ய முடியுமாக இருக்கிறது எனின் முழுமையாக நிறைவேற்றுவது சிரமம் என்று இயலுமானதையும் விட்டு விடக் கூடாது, குறைந்த பட்சம் இயலுமான பகுதியை மாத்திரமேனும் நிறைவேற்ற வேண்டும் என்பதே இந்த விதி சொல்லும் கருத்தாகும் (Abdul salam.A.ND)[39].

4. சங்கடம் இல்லாமல் செய்யப்பட வேண்டும், சங்கடத்தை ஏற்படுத்துவது ஷரீஅத்தின் நோக்கமல்ல. (الحرج مرفوع غير مقصود):
அடிப்படையில் இஸ்லாம், சங்கடமான ஒரு நிலையை தனது சட்டத்தின் மூலம் ஏற்படுத்துவது இல்லை, மனிதன் இஸ்லாத்தின் சட்டங்களை நிறைவேற்ற முற்படும் பொழுது, சங்கடங்களை எதிர்கொள்கிறான் எனின், அவற்றைத் தவிர்க்கும் வண்ணம் அவனுக்கு சட்டம் இலகுபடுத்திக் கொடுக்கப்படுவதுடன் அவன் மீது எந்தக் குற்றமும் இருக்க மாட்டாது என்பதை இந்த விதி உணர்த்துகிறது (Asshuhaili,M. : 2006)[40].

5. மர்ஜூஹ் என்னும் பலம் குறைந்த கருத்தை நடைமுறைப்படுத்தல். (العمل بالمرجوح):
பலமான ஆதாரத்தைக் கொண்ட சட்டம் இருக்கின்ற நிலையிலும் அசாதாரண சூழல் ஒன்றில் பலவீனமான ஆதாரத்தைக் கொண்ட சட்டத்தைப் பின்பற்றுவதற்கு அனுமதியிருக்கிறது என்பதையே இந்த விதி உணர்த்துகிறது (Albararah,S: 2013) [41].

6. மக்ரூஹ் எனும் தவிர்ந்து கொள்வதே உகந்தது என்ற சட்டம் தேவை நிலையின் காரணமாக அனுமதிக்கப்படும். (المكروه يباح عند الحاجة):
மக்ரூஹ் என்பது ஒன்றைத் தவிர்ந்து கொள்வது ஏற்றமானது என்பதைக் குறிக்கும் சட்டமாகும், இதனைத் தவிர்ந்து கொள்வதால் நன்மை இருக்கிறது, ஆனால் செய்வதால் பாவம் எழுதப்படுவதில்லை. அல்ஹாஜா என்பது தேவை நிலையைக் குறிக்கும், இது அத்தியவசிய நிலையை விடவும் தரத்தில் குறைந்தது, தேவை நிறைவேற்றப்படாத போது ஒருவன் சிரமங்களுக்கும் சங்கடங்களுக்கும் உற்படுவான், எனவே மனிதனுக்கு தேவை நிலையொன்று ஏற்படும் எனின் அது அவனுக்கு மக்ரூஹானதையும் அனுமதிக்கும் என்பதே இந்த விதி உணர்த்தும் கருத்தாகும் (Ibn Taymiyyah: 2004) [42].

பெருந்தொற்றுச் சூழலுக்குரிய மார்க்க சட்டவிளக்கங்களைப் பெற்றுக் கொள்ளல்

ஏலவே விளக்கப்பட்டது போல் கோவிட் 19 என்னும் பெருந்தொற்றுச் சூழலைச் சட்டப் பார்வையில் ஒரு சட்ட நியாயமாகவும் புதியதொரு பிரச்சினையாகவும் கருதலாம். இந்த அசாதாரண சூழலின் மீது முன்னைய பத்தியில் பேசப்பட்டுள்ள விதிகளும் கோட்பாடுகளும்

பிரயோகிக்கப்படுவதன் மூலம் பெருந்தொற்றுக் கால மார்க்க சட்ட விளக்கங்கள் பெற்றுக் கொள்ளப்பட முடியும். அந்தவகையில் ஜனாஸா, தொழுகை, ஸகாத் போன்ற பரப்புக்களுடன், மாத்திரம் சம்பந்தப்பட்ட சில சட்டப் பிரச்சினைகளுக்கு இங்கு தீர்வுகள் பரிந்துரைக்கப்படுகின்றன. இதன் போது மனித உயிர் காக்கப்படுதல், தீமை அகற்றப்படுதல், நிர்ப்பந்தம் கவனத்தில் எடுக்கப்படுதல், சிரமம் நீக்கப்படுதல், நலன் முற்படுத்தப்படுதல் போன்ற காரணிகள் பிரதானமாகக் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

ஜனாஸா தொடர்பான சட்டங்கள்

1. குளிப்பாட்டுதல்:

இலங்கையில் கோவிட் 19னால் பாதிக்கப்பட்டு மரணமடைந்த ஜனாஸாவை குளிப்பாட்டுவது அவசியமற்றது, அரச அனுமதியிருந்தாலும் தற்போதைய சூழலில் குளிப்பாட்டாமல் இருப்பதே சிறந்தது, இது ஷரீஅத்தில் ஒரு குற்றமாகக் கருதப்பட மாட்டாது. குளிப்பாட்டுவதால் நோய்ப் பரவலுக்கான வாய்ப்பு இருப்பதனால், தீமை அகற்றப்பட வேண்டும் மற்றும் நிர்ப்பந்தம் தடுக்கப்பட்டதையும் அனுமதிக்கும் போன்ற விதிகளின் அடிப்படையிலும் இலங்கையில் ஜனாஸா விவகாரம் ஒரு அரச பொறிமுறையாகவன்றி சமூகப் பொறிமுறையாக இருப்பதனால் முஸ்லிம்கள் மத்தியில் அவற்றைக் கையாள்வதற்குத் தகுதியான பயிற்றப்பட்டவர்கள் இல்லை என்ற அடிப்படையிலும் இந்த முடிவு பெறப்படலாம்.

2. கபன் செய்தல்:

சர்வதேச மற்றும் உள்நாட்டு வைத்திய நிபுணர்களது வழிகாட்டலின் படி, கோவிட் 19 பாதிப்பினால் மரணித்த ஒரு ஜனாஸாவிலிருந்து எந்த வகையான நீர்க் கசிவுகளும் வெளிவராத வகையில், நீர் உற்புகாத தடித்த வகைப் பிடவைகள் அல்லது பொலிதீன் பைகளில் அடைத்து அடக்கம் செய்ய வேண்டும், அத்துடன் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் இந்தப் பணியைச் செய்ய வேண்டும், இஸ்லாத்தின் கபனிடுதல் செயற்பாட்டின், முழு உடலையும் மறைத்து மனித கண்ணியத்தைக் காத்தல் என்ற நோக்கம், தற்போது நடைமுறையில் இருக்கும் சுகாதார நடைமுறை ஊடாக நிறைவு செய்யப்படுகிறது என்றவகையில் இதனைக் கபனாகக் கருத முடியும்.

3. தொழுகை நடாத்துதல்:

ஜனாஸா தொழுகையை எங்களுக்கு சாத்தியமான அமைப்பில் வைத்தியசாலையிலோ அல்லது வீட்டிலோ அல்லது வேறு இடங்களிலோ ஒருவரோ அல்லது பலரோ நிறைவேற்ற முடியும் என்பதுடன் தொழுகையில் கலந்து கொள்ள முடியாதவர்கள் பின்னர் தனித்தோ அல்லது கூட்டாகவோ ஸலாதுல் காயிப் தொழுகையிலும் ஈடுபடலாம். இஸ்லாம் இலகுவை விரும்புகிறது, சங்கடத்தை ஏற்படுத்த விரும்புவதில்லை, தீமையைத் தடுக்கிறது, மகாஸிதுகளை அடைந்து கொள்வதை முதன்மைப்படுத்துகிறது, கஷ்டமானதன் காரணமாக இலகுவானதையும் விட்டுவிட அவசியமில்லை போன்ற விதிகள் மற்றும் கோட்பாடுகளின் அடிப்படையில், இலங்கையில் மேற்சொன்னவாறு நெகிழ்வான போக்கில் நடந்து கொள்வதற்கான தாராள இடம்பாடு இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

4. அடக்கம் செய்தல்:

ஷரீஅத் ரீதியான ஆதாரங்களின் அடிப்படையில் அடக்கம் செய்வதே இஸ்லாத்தின் அடிப்படைச் சட்டமாகும், ஆனால் விஞ்ஞான பூர்வமான பலமான சான்றுகளுடன் எரிப்பதன் ஊடாக மாத்திரமே தொற்று நோய்ப் பரவலைத் தடுக்க முடியும் என்ற ஒரு விதிவிலக்கான சூழலில்

தகனம் செய்தல் என்ற தெரிவை நோக்கிச் செல்ல முடியும். இலங்கையின் சூழ்நிலையில் தகனம் செய்தல் என்ற நடைமுறை முறையான விஞ்ஞான பூர்வமான ஆதாரங்களுடன் நிரூபிக்கப்படவில்லை, அத்துடன் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிவுறுத்தல்களும் இலங்கையின் தொற்று நோய் விஞ்ஞானம் மற்றும் நுண்ணுயிர் துறை அறிஞர்களுடைய கருத்துக்களும் அடக்கம் செய்தல் தவறானதல்ல, அதனால் எந்த பாதிப்பும் ஏற்பட மாட்டாது என்கின்றன. அந்தவகையில் சட்ட அடிப்படைகளும் விஞ்ஞான உண்மைகளும் சந்திக்கும் புள்ளி எதுவெனின், இலங்கையில் கோவிட் 19 பாதிப்பினால் மரணமடைந்த ஜனாஸாக்களை தகனம் செய்ய முடியாது அடக்கம் செய்யும் நடைமுறையே முஸ்லிம் சமூகத்திற்கு அனுமதிக்கப்பட்ட மார்க்கம் என்பதாகும்.

5. ஜனாஸாவைப் பெட்டிகளில் அடைத்தல்:
இது இஸ்லாத்தின் மரபு அல்ல என்பதனால் இமாம்கள் இதனை மகரூஹ் என்றனர், ஆனால் தேவையின் நிமித்தம் மக்ரூஹான ஒன்று அனுமதிக்கப்பட முடியும் என்ற வகையில் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்திற்கு இலகுவாக அமைதல் போன்ற காரணங்களினால் இந்நடைமுறையை அனுமதிக்க முடியும்.

தொழுகை தொடர்பான சட்டங்கள்

1. பள்ளிவாயல்களில் வணக்கவழிபாடுகள் முழுமையாக இடைநிறுத்தப்படல்:
பள்ளிவாயல் கூட்டு வணக்கங்களின் போது நோய்ப் பரவலுக்கான வாய்ப்பு அதிகம் காணப்படுகிறது, எனவே முழுமையான முடக்கம் மற்றும் தனிமைப்படுத்தலுக்கு உற்பட்ட பிரதேசங்களில் பள்ளிவாயல்களில் ஜமாஅத், ஜும்ஆ உற்பட எவ்விதமான ஒன்று கூடல்களும் நடாத்தப்படக் கூடாது, நாட்டின் இனவாத சூழலைக் கருத்தில் கொண்டு அதான் சொல்வதும் தவிர்க்கப்படுதே பொறுத்தமானது, சமூக முடக்கம் இல்லாத இடங்களில் தொழுகையாளிகளின் எண்ணிக்கை, முகக் கவசம் அணிதல், வரிசைகளில் இடைவெளியைப் பேணுதல் போன்ற கட்டுப்பாடுகளைப் பேணி, பள்ளிவாயல்கள் இயங்க முடியும். காரணம் இஸ்லாம் நோய், மழை போன்ற காரணிகளுக்காகவும் கூட்டு வணக்கங்களைத் தவிர்ந்து கொள்ள அனுமதி வழங்கியுள்ளதுடன் சட்ட அமுலாக்கத்தில் சங்கடங்களை ஏற்படுத்தவும் விரும்புவதில்லை, அதுபோல் மனித உயிர் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் மிகுந்து வலியுறுத்துகிறது.

2. ஜும்ஆத் தொழுகைகக்கான எண்ணிக்கை வரையறை:
ஜும்ஆத் தொழுகை கடமையாவதற்கு நாட்பது பேர் காணப்பட வேண்டும் என்ற எண்ணிக்கை வரையறை அவசியமற்றது என்பது பெரும்பாலான அறிஞர்களின் கருத்தாகும், எனவே பள்ளிவாயல்களில் பெரும் தொகையானவர்கள் ஒன்று கூட முடியாத நிலையில் சிறிய பள்ளிவாயல்கள் மற்றும் பொது இடங்களிலும் சாத்தியமான சிறிய தொகையினர் இணைந்து ஜும்ஆத் தொழுகையில் ஈடுபடுவது அனுமதிக்கப்படுகிறது. ஆனால் இலங்கையில் இந்த நடைமுறைக்குச் செல்லாமல் இருப்பதே பொறுத்தமானது, காரணம் ஊர் மட்டங்களில் பள்ளிவாயல் தலைமைகளுக்கு மக்கள் கட்டுப்பட்டு, முறையாக ஒழுங்குகள் பேணப்படும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை. எனவே எண்ணிக்கைக் கட்டுப்பாடு உள்ள சமயத்தில் ஜும்ஆத் தொழுகையை நடாத்தி அபாயத்தை எதிர்கொள்வதை விடவும் ஜும்ஆத் தொழுகை கடமையில்லை என்று கொள்வதே மிகவும் பொறுத்தமானதாகும்.

3. ஜுமுஆத் தொழுகையை வீட்டில் குடும்பத்துடன் நிறைவேற்றல்:
கோவிட் 19 போன்ற ஒரு அசாதாரண சூழலில் அடிப்படையில் ஜுமுஆக் கடமையாக மாட்டாது. எனவே வீட்டில் ஜுமுஆத் தொழுவது கடமையான ஒரு அம்சம் அல்ல, ஆனால் வீட்டில் தொழப்படும் ஜுமுஆ நிறைவேற மாட்டாது என்று சொல்ல முடியாது, வீட்டின் ஆன்மீக சூழலைப் பேணுதல் மற்றும் பயிற்றுவிப்பு நோக்கங்கள் கருதி வீட்டில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் உற்பட அனைவரும் ஜுமுஆத் தொழுகையில் ஈடுபடலாம்.

4. ஜுமுஆ நேரத்தில் வியாபாரத்தில் ஈடுபடுதல்:
ஜுமுஆ நேரத்தில் வியாபாரம் தடுக்கப்பட்டமைக்கான காரணம் இறை நினைவுக்காக ஒதுக்கப்படும் இந்த நேரத்திற்குத் தடை வந்துவிடக் கூடாது என்பதற்காகும். பெருந்தொற்றுக் காலத்தில் ஜுமுஆத் தொழுகை கடமையில்லை என்றிருக்கின்ற பொழுது, குறித்த காரணம் இங்கு இல்லாது போகின்றது, எனவே வியாபாரம் செய்வது இங்கு அனுமதிக்கப்படுகிறது.

5. ஜமாஅத் தொழுகையின் வரிசையில் இடைவெளி விடுதல்:
சாதாரண நிலைகளிலும் தொழுகையில் வரிசைகளில் இடைவெளி விடுவது தொழுகையைப் பாதிக்க மாட்டாது என்பது பெரும்பாலான இமாம்களது நிலைப்பாடாகும், எனவே உயிர் பாதுகாப்பு, தீமையை அகற்றுதல் போன்ற காரணங்களை மையப்படுத்தி தொழுகையில் இடைவெளி விடுவது அனுமதிக்கப்படுகிறது.

ஸகாத் தொடர்பான சட்டங்கள்

1. ஸகாத்தை முற்படுத்திக் கொடுத்தல்:
சாதாரண ஒரு சூழலிலேயே பெறுபவரின் தேவையின் அடிப்படையில் ஸகாத்தை முற்படுத்தி வழங்க முடியும் என்பது பெரும்பாலான இமாம்களது கருத்தாகும். எனின் அசாதாரண சூழல் ஒன்றிற்கு நிச்சயமாக ஸகாத்தை முற்படுத்தி வழங்க முடியும். அத்துடன் எத்தனை வருடங்களுக்குரிய ஸகாத்தை முற்படுத்திக் கொடுப்பது என்பதில் ஒவ்வொருவரது இயலுமை மற்றும் விருப்பத் தேர்வுக்கு ஏற்ப செயற்படுத்த முடியும்.

2. ஸகாத்தைப் பொருளாக விநியோகம் செய்தல்:
ஸகாத் விநியோகத்தில் பெறுபவரின் நலனே பிரதானமானது என்றவகையில், அதனைப் பணமாகவும் பொருளாகவும் விநியோகிக்க முடியும்.

**முடிவுரை**

கோவிட்19 உலக அனர்த்தத்தினை எதிர்கொள்வதற்கு இஸ்லாம் சிறந்த லழிகாட்டல்களை வழங்குகிறது. பெரும் தொற்றுக்கள் பற்றிய இஸ்லாத்தின் போதனைகள் மனிதனுக்கு வாழ்வு பற்றி நம்பிக்கையையும் உத்வேகத்தையும் வழங்குவதுடன், நம்பிக்கையீனம், பயம், கவலை இவற்றிலிருந்து மனிதனை மீட்டெடுக்கின்றன, ஏனெனில் மனிதனை அல்லாஹ்வை நோக்கி மீளச் செய்யும் பணியையே நோய்கள் செய்கின்றன. பெருந்தொற்றுக்களின் போது கடைபிடிப்பதற்குரிய இஸ்லாம் வழங்கியுள்ள சுகாதார வழிகாட்டல்கள் காலத்தால் முந்தியவை என்பதுடன், நவீன மருத்துவ வழிட்டல்களுடன் உடன்பட்டுச் செல்வதாகவும் காணப்படுகின்றன. இஸ்லாத்தின் சுகாதார ரீதியான தற்காப்புப் பிரயோக செயன்முறைகள் அனைத்தும் ஆன்மீக ரீதியாகவும் பௌதீக ரீதியாகவும் கட்டமைக்கப்பட்டுள்ளதுடன் தனிமனித, சமூக ஆரோக்கிய

வாழ்வுக்குரிய சிறந்த சுகாதாரப் பழக்க வழக்கங்களாகவும் அமைந்துள்ளன. பெருந்தொற்று அசாதாரண சூழலிற்கான சட்டத் தேர்வுகள் குறித்த இஸ்லாத்தின் அணுகுமுறையும், மனித நலன் சார்ந்ததாகவும் மிகுந்த நெகிழ்வுப் போக்குடனும் காணப்படுகிறது. மனித உயிர் காக்கப்படுதல், மனித கண்ணியம் மதிக்கப்படல், செல்வம் பாதுகாக்கப்படல், சிரமத்தைத் தவிர்தல், தீங்கைத் தடுத்தல் போன்ற உயர் பெறுமானங்களின் மீது இஸ்லாம் பெருந்தொற்றுக் கால விஷேட சட்டவாக்கத்தைக் கட்டமைத்திருக்கிறது. எனவே முஸ்லிம்களைப் பொறுத்தவரையில், அரசின் பெருந்தொற்றுக் கால சுகாதார ஒழுங்கு விதிகளை கடைபிடிப்பது மிகச் சிறந்ததொரு இஸ்லாமிய வாழ்வாகும். அத்துடன் இஸ்லாம் என்றும் மனித நலனுக்குரிய உலகப் பொதுமறை என்ற உண்மையையும் இவை உணர்த்துகின்றன.

## மேற்கோள் நூல்கள்:


1. world meters, (2021). covid 19 coronavirus pandemic cases, *https://www.worldometers.info/coronavirus/* 25-04-2021 *அன்று பார்க்கப்பட்டது.*
2. *சுகாதார மேம்பாட்டுப் பணியகம்,*(2021). *https://www.hpb.health.gov.lk/en* 25-04-2021 *அன்று பார்க்கப்பட்டது.*
3. Shaima M. Hassan and others, (2021). How do Muslim community members perceive Covid -19 risk reduction recommendations - a UK qualitative study? BMC Public Health, 2021, 21:449, pp.1-14.
4. Tamil miriror,(2020). *http://www.tamilmirror.lk/medical/%E0%A4-/142-1566184-ை142-156618 15*-12-2020 *அன்று பார்க்கப்பட்டது.*
5. Ismail Albuhaari, M. (1997). *Sahih al Bukhari*. Labanan: Tharul Arham.
6. Al Quran. (2002). (Tamil Translation) Ministry of Islamic affairs. Madeena; king Fahad publication. Aththiayayam 3, vasanam 49,P-57.
7. Ahmad, Z., & Ahad, A. ( 2020). COVID-19: A Study of Islamic and Scientific Perspectives. Theology and Science, online https://doi.org/10.1080/14746700.2020.1825192.
8. Ismail Albuhaari, M. (1997). *Sahih al Bukhari*. Labanan: Tharul Arham. Hadees number 5757, p-1457.
9. Ismail Albuhaari, M. (1997). *Sahih al Bukhari*. Labanan: Tharul Arham. Hadees number 3473, p-861.
10. *Al Quran*. (2002). (Tamil Translation) Ministry of Islamic affairs. Madeena; king Fahad publication. Aththiayayam 30, vasanam 41. p-409.
11. *Al Quran*. (2002). (Tamil Translation) Ministry of Islamic affairs. Madeena; king Fahad publication. Aththiayayam 2, vasanam 195. p-31.
12. Ismail Albuhaari, M. (1997). *Sahih al Bukhari*. Labanan: Tharul Arham. Hadees number 5707, p-2343.
13. Bin Yaeeh Alkasweenee, M. (1956). *Sunan Ibnu Maajah*. Egpt: Tharul Ihaaul kutub. Hadees number 2341, p-1112.
14. Mohammed Bin Isaah, Aththirmithi. (1970). *Sunan Attirmiti*. Egpt: lajnatul Tahleef. Hadees number 3470, p-1724.
15. Ismail Albuhaari, M. (1997). Medpadi, Hadees number 3470, p-1724.
16. Ismail Albuhaari, M. (1997). Medpadi, Hadees number 5771, p-2352.
17. Muslim bin ismail, Annaisaaboori. (1997). *Sahih Muslim.* Lubanan: Tharul Ibnu kasm. Hadees number 2231, p-1012.
18. Muslim bin Ismail, Annaisaaboori. (1997). Medpadi, Hadees number 5771, p-2352.

19. *Al Quran*. (2002). (Tamil translation) Ministry of Islamic affairs. Madeena; king Fahad publication. Pakkam 579.
20. Ismail Albuhaari, M. (1997). *Sahih al Bukhari*. Labanan: Tharul Arham. Hadees number 74, p-153.
21. Islah Aththirmithi, M. (1970). *Sunan Attirmiti*. Egpt: lajnatul tahleef. Hadees number 2745, p-1224.
22. Aljijlasthani, Aboothauth. (1999). *Sunan Abu Dawud*, koyro: Makthaba Thijariyyah. Hadees number 3874, p-531.
23. Ismail Albuhaari, M. (1997). *Sahih al Bukhari*. Labanan: Tharul arham. Hadees number 153, p-76.
24. Aljijlasthani, A*budawud* (1999). koyro: Makthaba Thijariyyah. Hadees number 543, p-221.
25. Ibn Qayyim, al -jawziyyah. (2001). *Almahroof bibnu kayyoom aljawsiyyah abu ubaitha*. Mahar ibnu hasan al salman(edu), Soudi Arabiya: Tharul ibnu kasim. p-165.
26. *உலக சுகாதார ஸ்தாபனம், வலைத்தளத்தில் காணப்படுகிறது,* *https://www.who.int/ar/emergencies/diseases/novel-coronavirus-2019/question-and-answers-hub/q-a-detail/coronavirus-disease-covid-19 15-12-2020* 15-12-2020 *அன்று பார்க்கப்பட்டது.*
27. Akra Ali, M. (2015). *asrarul fee finaail ahkaam araairaiyyah*, thirasaah uloomu reeiaah walkanoon. Jurdan; imathathul fahl alilm, Al jaamiah alurduniah. p-1113-1123.Available Online https://search.mandumah.com/Record/723784 15-12-2020 *அன்று பார்க்கப்பட்டது.*
28. Mohammed Usri,I. (2011). *fiqihin nawasil lilakaliyyath almuslima*, thahseelan wathtahbeekan. Egpt: Tharul quthub almisriyyah. Paham -1, p-43-44.
29. Ishaq Ash, Shaathibi. (2017). *Almuwabakaath.* (edu), Moroko: Mansoorathul bin adiah. Paham -5, p-11.
30. Juhaim, N. (2009). *Taiseerul Muwabakaath lilimaam Aahibi.* Lubanan: Tharul ibnu hasm. P-146.
31. Juhaim, N. (2009). P-610.
32. Ibn Taymiyyah. (2004). *Majmaul Fahawa.* Souhi Arabiya: Majammah Malik Fahad lihiabahul mushaf aarif. Paham-20, P-48.
33. Ibn Taymiyyah. (2004). Medpadi p-54.
34. Arraisooni.A (2013). *Muhaalarath Bee Makasiti Reeaih.* Egpt: Tharul kaleemai. P-215.
35. Alharbi, M.M. (2020). *Mahlamathu Saaith Lilkawaithul Fiqhiyyah.* Abu Lafee.p-317-320.
36. Abu Dhabi, (2013). *Alkawaithul Fiquhiyyah bil Mathakibul Arbaiaa.* Damasas: Tharul Fiqr. Paham -1, p-199.
37. Alharbi, M.M. (2020). *Asaru fee Binail Thajthalibith Thaseer Alah Jahathi Corena Waththabeekahuha fee paapul ibaathath. majllahul reeha waththirasah al islamiyyah.* Kuwait: jamuail Kuwait. P-272
38. Arraisooni, A. (2013). *Muhaalarath bee Makasiti reeaih.* Egpt: Tharul kaleemai. P-153-154.
39. Abdul salam.A.ND. *Kawaihul Ahkam fee Mashahhil anaam.* Beyrooth: tharul kuthubul islamiyyah. P-19.
40. Asshuhaili, M. (2006). *Alkawaithul fiquhiyyah bil mathakibul arbaiaa.* Damasas: tharul fiqr . Paham -4, p-10.
41. Asshuhaili, M. (2013). A*lakthu bilakwal almarjeeha najra fiqhiyyah mukarana. thirasath arabiyyah waislamiyyah.* Egpt: jamiahul qaakira markasul loohath al ajanabiyyah waththarjeema aththakassusiyyah.
42. Ibn Taymiyyah, A. (2004). *Majmaul fahawa. Souhi Arabiya: majammah malik fahad lihiabahul mushaf aarif.* Paham-21, P-312.